திரு. எஸ். முருகையன்: யாத்ரிக ஸ்தலங்களாக உள்ள நகர சபைகளுக்கு குடிதண்ணீர் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறதா? எத்தனை நகரசபைகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது? இன்னும் குடிதண்ணீர் வழங்கப்படாமல் இருக்கும் நகர சபைகள் எத்தனை?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

* 370 கேள்வி.—திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செயங்கொண்ட சோழபுரத்திற்கு குடிநீர் வசதி செய்துதர கொள்ளிடத்திலிருந்து நீர் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்திற்கு செலவாகும் தொகை எவ்வளவு?

(உ) இத்திட்டத்தை மேலும் விஸ்தரித்து பல கிராமங்கட்கும் நீர் விநியோகிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) முதல் (உ) வரை இல்லை; அவ்விதமான யோசனை இல்லை.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம்: தலைவர் அவர்களே, செயங்கொண்ட சோழபுரத்திற்கு கொள்ளிடத்திலிருந்து குடி தண்ணீர் கொண்டுவருவதற்கு போட்ட திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? ஏற்கனவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது? அது வருமா? வராதா? குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்குத் தயங்குவானேன்? அவலச்சேரியில் முதலியார் தெருவில் உள்ள ஏரியில் ஒரு குடம் இரண்டு குடம் தண்ணீர் எடுக்க போலீஸ் பந்தோபஸ்து போட்டு விடுகிறார்கள். இந்த நிலையில் அங்கே ஒரு ஓவர் ஹெட் டாங்க் அவசியம் போடவேண்டும். "உங்களால் தான் வரவில்லை" என்று அங்கே உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அதைக்கட்டிக் கொடுத்து குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்போது இரண்டு கோடி ரூபாய் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நகரசபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் ஜனத்தொகையுள்ள நகரசபைகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்படும். ஜெயங்கொண்டானைப் பொறுத்தவரை அது இவ்வாண்டு சேர்க்கப்படவில்லை அது பரிசீலனையில் இருக்கிறது.

4th November 1966]

திரு. நு. ப. அழகமுத்து : ஜெயங்கொண்டான் பகுதிக்கு காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் வகுக்கப்பட்டு டெவலப்மென்ட் கவுன்சில் சிபார்சு செய்திருக்கிறதா? அப்படி யென்றால் அந்த சிபார்சுகள் பரிசீலனை செய்யப்பட்டனவா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. இர. பொன்னப்ப நாடார் : கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கு மத்திய சர்க்காரிலிருந்து பணம் ஒதுக்கிடு செய்யப் பட்டிருக்கிறதா? பணம் அங்கிருந்து வராததினால்தான் வேலைகளைத் துவக்க தாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது. ஆகையால் மத்திய சர்க்காரை மாகாண சர்க்கார் சீக்கிரம் பணத்தை ஒதுக்கும்படி கேட்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பல திட்டங்களுக்கு மத்திய சர்க்காரிடமிருந்து நிதிகள் வருவதற்கு மாகாண அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. எம். குழந்தைசாமி கவுண்டர் : குடிதண்ணீர் வசதி ஓமலூருக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா? மேட்டூர் தண்ணீர் சேலம் வரும்போது அது ஓமலூருக்குக் கொண்டுவரப் படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்தக் கேள்வி ஜெயங் கொண்டானைப் பொருத்தது. அதற்குத் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

*371 கேள்வி.—**திரு. நா. சௌந்திரபாண்டியன் : கனம்** சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரியில் குடி தண்ணீர் பற்றுக்குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது விண்ணப்பங்கள் அண்மையில் வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவைகளின்மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) நாங்கு னேரிக்கு நீர் வழங்குவதற்குரிய வேலைத் திட்டம் ஒன்றுக்கு வகை செய்யுமாறு நாங்குனேரி, தூ நீர் வழங்க திட்டக்குழுவின் உறுப்பினர்களிடமிருந்து 1965 ஜூன் மாதத்தில் முறையீடு ஒன்று அரசாங்கத்துக்கு வந்தது. பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் ஒப்புதலுடன் "கிராமப் பணிகள் திட்டத்தின்" கீழ் தான் இப் பஞ்சாயத்துக்கு நீர் வழங்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ளலாம் என்று இக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.